ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2300/09 - 2022 ඔක්තෝබර් මස 04 වැනි අඟහරුවාදා - 2022.10.04
2300/09 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### ஆசிரிய ஆலோசகர் சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பினைத் திருத்தியமைத்தல் - திருத்த இலக்கம் 01

2020.07.01 ஆந் திகதிய 2182/36 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட ஆசிரிய ஆலோசகர் சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

**எம். ஏ. பீ. தயா செனரத்,**
செயலாளர்,
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

கொழும்பு,
2022, செத்தெம்பர் 27.

14.4 (அ) 2022.01.02 ஆந் திகதியன்று சேவையில் ஈடுபட்டுள்ள, அத்திகதிக்கு முன்னர் ஆசிரிய ஆலோசகர் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் இந்த சேவைப் பிரமாணக்குறிப்பின் 14.1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய 2022.01.02 ஆந் திகதி முதல் செயல்வலுப்பெறும் வகையில் இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்படுவர்.

(ஆ) மேற்படி (அ) உட்பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் 2022.01.02 ஆந் திகதி முதல் சேவைக்கு உள்ளீர்க்கப்படும் உத்தியோகத்தர்களின், 2020.07.01 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட உள்ளீர்ப்பு இரத்துச் செய்யப்படும்.

(இ) எவ்வாறாயினும் 2020.07.01 ஆந் திகதி முதல் சேவையில் உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் முன்வைக்கப்படும் கோரிக்கையின் அடிப்படையில் அந்த உத்தியோகத்தரின் உள்ளீர்ப்புத் திகதி 2020.07.01 எனக் கருதி செயலாளர் நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

EOG 10 - 0010

1A - G 37686 — 08 (2022/10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.